திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த புள்ளி விவரத்தைப் பார்க்கும் போதே இந்த அரசு எவ்வளவு பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். சென்னைக்கு ஒரு கோடி அளவுக்கு செலவு செய்யப்படுகிறது. சிறிய ஜில்லாவான ராமநாதபுரம் ஜில்லாவுக்கு ஆறு லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படுகிறது. ஆனால் மிகப் பெரிய ஜில்லாவான 32 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மதுரை ஜில்லாவுக்கு 4 லட்சம் அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி குறைத்து செலவு செய்யப்படுவதால்தான் தேவையான மயக்க மருந்து போன்றவை கூட கொடுக்கமுடியாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : சென்னையில் பெரிய மருத்துவ மனை இருக்கிறது. மாநிலத்திலுள்ள மக்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு அதிகமாக வருகிறார்கள். ஜனப்பெருக்கம் அதிகமாகவுள்ள இடம் சென்னை. அதையெல்லாம் கணக்குப்பார்த்துத்தான் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. ராமதாஸ் : ஜில்லாவாரியாக ஒதுக்கப்பட்ட பணத்தை அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட மருந்து ஆஸ்பத்திரியில் இல்லை என்று உறுப்பினர் கேட்டதற்கு அமைச்சரின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : குறிப்பிட்ட மருந்தின் பெயர் என்ன என்று தெரிந்தால் சொல்லலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் மயக்க மருந்து இல்லை. அதன் பெயர் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : என்ன மருந்து என்று பெயர் தெரியாமல் சொல்லமுடியாது.

• • • •

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : ராமநாதபுரத்திற்கு அதிகமாகவும் மதுரைக்கு கொஞ்சமாகவும் நிதி கொடுத்திருப்பதாக நண்பர் தியாகராசன் அவர்கள் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவில் அதிகமாக தீர்வை கொடுக்கிறார்கள். ஆகையால் எங்களுக்குக் கொடுப்பது அதிகம் என்று சொல்வதற்கில்லை. அதிகமாக இருக்கிறது என்று சொல்லியதால், அதைக் குறைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO TERMINATION OF SERVICES OF NON-BASIC TRAINED TEACHERS FROM SENIOR (AIDED) BASIC SCHOOLS IN KOLLIDAM RANGE OF SIRKALI TALUK, MAYURAM EDUCATIONAL DISTRICT.

THIRU G. KRISHNAMOORTHY : MR. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the termination of services of non-Basic Trained Teachers from Senior (Aided) Basic Schools in Kollidam Range of Sirkali taluk, Mayuram Educational District, Thanjavur District, on and from the 5th February 1968 and the distress caused to such teachers.

** Expunged as ordered by the Chair.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, under the rules, non-basic trained teachers cannot be employed in Basic Schools. Retraining Courses in Basic Education were formerly organized by the Department with a view to give necessary training in Basic Education to non-basic trained teachers employed in elementary schools which were converted into basic pattern. These retraining courses were, however, stopped a few years ago with the result, such teachers do not now have the facility of getting the basic training qualification. In view of this the Government have examined the matter and in G.O. Ms. No. 1935, Education, dated the 1st November 1965, they have issued orders to the effect that necessary exemption might be granted by the competent authorities to all such non-basic trained teachers holding appointment in Basic schools to enable them to continue in service and to draw the usual increments, after obtaining an undertaking from the teachers concerned that they would undergo the retraining course in Basic Education as and when it is organised.

It was also ordered therein that future vacancies in Basic Schools should be filled up by appointing Basic trained teachers only.

It has been reported that the non-basic trained teachers in question have been appointed subsequently in contravention of the orders issued in the G.O. referred to. The District Educational Officer, Mayuram, has therefore, withheld grants from such teachers.

The Director of Secondary Education has, however, since issued instructions to the District Educational Officer, Mayuram, that pending examination of the question, the non-basic trained teachers in Senior (Aided) Basic Schools in Kolladam Range of Sirkali taluk may be continued in service and grants may continue to be assessed on their behalf till the closure of the schools for summer vacation.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968–69—*cont.*

திரு. எஸ். எஸ் ராமசாமி படையாட்சி: மன்றத் தலைவரவர்களே, இந்த 1968–69-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு நமது அனுமதி கோரி வேண்டியிருக்கிறார். நான் அதை வரவேற்று அதற்கான விளக்கத்தைத் தெரிந்து கொண்டதில் மகிழ்ச்சியடைகிறேன். அறிக்கையிலே விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார். அதிலே இந்த தமிழகத்திலே என்னென்ன செய்யமுடியும் என்றும், என்னென்ன செய்யமுடியாது என்றும், குறிப்பாக விவசாயத்தைப் பற்றியும் அதிகமாகக் கூறியிருக்கிறார். விவசாயத்தில் கடந்த மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் மத்திய அரசு அதிகம்